1974 ஏப்ரல் 10]

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, மத்திய அரசு மானியத்தின் கீழ் 1972-73 ஆம் ஆண்டிலே 877 பி.டி. ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. நமது மாநிலத்திலே பல ஆயிரக்கணக்கான தொடக்கப் பள்ளிகள் இருக்கும்போது, 877 பள்ளிகளுக்கு மட்டும் பி.டி. ஆசிரியர்களை நியமித்து, மற்ற மற்ற பள்ளிகளிலே அந்த நிலைமை ஏற்படாத நிலையிலே மத்திய அரசு ஒரு ஆண்டுக் காலத்தோடு அந்த மானியத்தை நிறுத்தி விட்டது. இதை மேலும் தொடருவதற்கு மத்திய அரசிடம் திட்டமிருக்கின்றதா? இது பற்றி மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தொடக்கத்தில் அவர்கள் 877 பதவிகளையும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பதவிகள் என்று வைத்தார்கள். நாம்தான் உயர் தொடக்கக் கல்வியின் தரம் உயர வேண்டுமென்ற நோக்குடன் பி.டி. ஆசிரியர்களை அங்கே நியமிக்கலாம் என்று கேட்டுக் கொண்டோம். அதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இந்தத் திட்டம் 1973-74-ஆம் ஆண்டிற்கு விரிவுபடுத்தப் படவில்லை. ஆக 1972-73 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து கொடுத்து வரும் உதவியை மட்டும்தான் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. 1973-74-ல் இந்தத் திட்டம் நீட்டிக்கப்படவில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, மத்திய அரசு உதவித் தொகையின் கீழ் நியமிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் எவ்வளவு என்ற தகவலை அரசு தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Tamil Nadu Dental Council.

* 296 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Tamil Nadu Dental Council has sought Government Grants during 1970-71;

(b) if so, whether any grant has been given to the Dental Council; and

(c) if not, the reasons therefor?

தமிழ்நாடு பல் சிகிச்சை மருத்துவக் குழு

திரு. எஸ். வெள்ளபாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு பல் சிகிச்சை மருத்துவக்குழு 1970-71-ல் மானியங்கள் வழங்கப்பட வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், தமிழ்நாடு பல் சிகிச்சை மருத்துவக் குழுவிற்கு மானியம் ஏதேனும் வழங்கப்பட்டுள்ளதா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) & (உ) இது குறித்து மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்காக தமிழ்நாடு பல் மருத்துவக் குழுவிடமிருந்து, அதன் வரவு செலவு குறித்த விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

Ration Allowance to Nurses in Madras.

* 297 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. Minister for Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to discontinue the ration allowance given to Nurses in Madras; and

(b) if so, the reasons therefor?

சென்னையிலுள்ள செவிலியருக்குப் பங்கீட்டுப் படி.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலுள்ள செவிலியருக்கு வழங்கப்படும் பங்கீட்டுப் படியை நிறுத்திவிடுவதற்கான செயற்குறிப்புகள் எவையேனும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை?